# காயல்பட்டினம் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் 30.08.2022 ஆம் நாள் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்டத்தின் தீர்மானம் நகல்கள்

**பொருள் எண் :1**

**நகர்மன்றத் தலைவர் கொண்டு வரும் தீர்மானம்:**

காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்ட போது ஆத்தூரில் குடிநீர் சுத்திகரிப்பு (Filter Bed) அமைத்து குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. தற்போது காயல்பட்டினம் நகராட்சி குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு 2017-ஆம் ஆண்டு முதல் புதிய குடிநீர் மேம்பாடு திட்டம் செயல்படுத்தும் வகையில் ஸ்ரீவைகுண்டம் பொன்னன்குறிச்சியில் தலைமை நீரேற்று மையம் அமைக்கப்பட்டு தாமிரபரணி ஆற்றுப்படுகையில் 6 எண்ணம் நீர் உறிஞ்சும் கிணறுகள் அமைக்கப்பட்டு அதன் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நகர் பகுதியில் சுத்தமாக குடிநீர் வழங்கும் பொருட்டு 5000LPM கொண்ட சுத்திகரிப்பு (Filter Bed) அமைப்பதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் மேற்கொள்வதற்கு இந்நகர்மன்றத்தின் சார்பாக கேட்டுக் கொள்வது.

**தீர்மான எண்:130**

இந்நகர் பகுதியில் சுத்தமான குடிநீர் வழங்குவதற்கு 5000LPM கொண்ட வடிகட்டி படுகை (Filter Bed) அமைப்பதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆய்வு பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

**பொருள் எண் :2**

**நகர்மன்றத் தலைவர் கொண்டு வரும் தீர்மானம்:**

காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் மழைக்காலங்களில் தேங்கும் மழைநீரை பொதுமக்கள் நலன் கருதி வெளியேற்றுவதற்கு எதுவாக மழைநீர் தேங்கும் இடங்களில் மின்மோட்டார்கள் மூலம் மழைநீரை வெளியேற்றுவதற்கு மோட்டார் அறை அமைப்பதற்கு இந்நகர்மன்றத்தின் சார்பாக கேட்டுக் கொள்வது.

**தீர்மான எண்:131**

எதிர்வரும் பருவ மழையை கருத்தில் கொண்டு பொதுமக்களின் பாதுகாப்பு செய்வதற்கு மழைநீர் தேங்குவதை வெளியேற்றுவதற்குரிய மோட்டார் அறைகள் அமைக்கும் பணிகள் செய்வதற்கு தீர்மானிக்கப்படுகிறது.

**பொருள் எண் :3**

**நகர்மன்றத் தலைவர் கொண்டு வரும் தீர்மானம்:**

இந்நகராட்சி அலுவலகத்தில் TN69U9148 பொலிரோ ஈப்பு வாகனம் வாங்கப்பட்டு பல வருடங்கள் ஆன நிலையில் இந்நகராட்சி பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்த

ஈப்பு வாகனம் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் இந்நகராட்சிக்கு கூடுதல் செலவினங்கள் ஏற்பட்டு வருகிறது. எனவே புதிய வாகனம் ஒன்று வாங்குவதற்கு நகர்மன்றத்தின் சார்பாக கேட்டுக் கொள்வது.

**தீர்மான எண்:132**

நிர்வாக நலனை கருத்தில் கொண்டு நகராட்சி அலுவலகத்தில் பல வருடங்களாக பயன்பாட்டில் உள்ள TN69U9148 பொலிரோ ஈப்பு வாகனத்திற்கு பதிலாக புதிய ஈப்பு வாகனம் வாங்குவதற்கு கருத்துரு அனுப்ப தீர்மானிக்கப்படுகிறது.

**பொருள் எண் :4**

காயல்பட்டினம் நகராட்சியின் நகர்மன்ற துணை தலைவர் திரு. Z.A. சுல்தான் லெப்பை அவர்கள் 18 வது வார்டுக்கு உட்பட்ட பகுதிகளில் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி தருவதற்கு தெரிவித்துள்ள கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கு பரீசிலனைக்கும் வைக்கப்படுகிறது.

**சாலை வசதி**

- காயல்பட்டினம் பிரதான சாலை ஸீ கஸ்டம்ஸ் சாலை முடிவில் வலது பக்கத்தில் (தெற்கு பக்கம்) அமைந்துள்ள 30 அடி அகலம் 700 அடி நிலம் உள்ள பண்டக சாலை தெருவிற்கு அடைப்புகளை அகற்றி தார் சாலை அமைத்து தர குறுவிதெரு பள்ளி நிர்வாகம் சேக் அப்துல்லாஹ் என்பவரும், S.M.P. முஹம்மது இஸ்மாயில் என்பவரும் முகைதின் ஜாஹிர் உசேன் ஸ்டாலில் ஆகியோர் என்னிடம் கோரிக்கை வைத்துள்ளார்கள். அந்த ரோடு அமைந்தால் ஸீ கஸ்டம்ஸ்ரோடு வழி வரும் வாகனங்களை தேங்காய் பண்டகசாலை வழியாக திருப்பி விடலாம். சனி, ஞாயிறு மற்றும் விஷேச தினங்களில் மக்கள் சிரமத்தை நீக்கலாம்.

**தெருமின் விளக்கு**

- தெருமின் விளக்கு இல்லாத மின் கம்பங்களுக்கு முதலில் மின் விளக்கு பொருத்த வேண்டும். சோடியம் இருக்கும் மின் கம்பங்களுக்கு LED மின் விளக்குகள் அல்லது டியூப் லைட் மாற்ற வேண்டும்.

**பொது**

- நகராட்சியில் பொதுசுகாதார பயன்பாட்டில் உள்ள தூய்மைப்படுத்தும் வாகனங்களை பழுது ஏற்படும் சமயத்தில் உடனடியாக சரி செய்தல்.
- கடற்கரை மணல் மேடு உள்ளதை சரிசமம் செய்து முள் புதர்களை சுத்தம் செய்து கடற்கரையில் வாகனம் செல்வதை தடை செய்ய வேண்டும். அதற்கு முன் பகுதியில் தடுப்பு பைப் அமைத்து உள்ளே செல்வதை தடுக்கலாம்.

**தீர்மான எண்:133**

- ஸி – கஸ்டம்ஸ் சாலை அமைக்க வேண்டிய இடம் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இடமாக இருப்பதால், ஒன்றிய அரசின் அனுமதி பெற்று சாலை அமைக்க தீர்மானிக்கப்படுகிறது.
- பணிகளின் அவசியம் கருதி அரசிடமிருந்து நிதி பெற்று தெருவிளக்குகள் அமைக்கும் பணி செய்வதற்கு தீர்மானிக்கப்படுகிறது.
- பொது சுகாதார வாகனங்ள் பழுதுகள் ஏற்படும் சமயத்தில் அவற்றை உடனடியாக பழுது நீக்கம் செய்ய தீர்மானிக்கப்படுகிறது.
- இந்நகராட்சி நிதி நிலைமையை கருத்தில் கொண்டு பொது கோரிக்கைகள் செய்வதற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

**பொருள் எண்.5**

காயல்பட்டினம் நகராட்சியின் 2 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. E. முருகன் அவர்கள் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி தருவதற்கு தெரிவித்துள்ள கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கு பரீசிலனைக்கும் வைக்கப்படுகிறது.

**சாலை வசதி**

- போக்குவரத்து அதிகமாக உள்ள சேதுராஜா தெருவில் உள்ள மண் பாதையை எதிர்வரும் மழைகாலத்திற்கு முன்பு பேவர் பிளாக் சாலையாக மாற்றி அமைத்தல்.
- போக்குவரத்து அதிகமாக உள்ள சேதுராஜா தெரு தெற்கு பகுதி (மகாழ்ரா பிளாட்-டில்) அமைக்கப்பட்டுள்ள சாலை மிகவும் பழுதடைந்து போக்குவரத்துக்கு ஏதுவாக இல்லாமல் உள்ளது. மேலும், எதிர்வரும் மழைகாலத்திற்கு முன்பு புதியதாக தார் சாலை அமைத்தல்.

**மழைநீர் வடிகால்**

- முத்தாரம்மன் கோவில் தெரு பகுதிகளில் பருவ மழை காலங்களில் பெய்யும் மழைநீர் வெளியேற முடியாமல் இருப்பதால் அப்பகுதி பொதுமக்களுக்கு மிகவும் பாதிப்பு அடையும் நிலையில் இருந்து வருகிறார்கள். எதிர்வரும் மழைகாலத்திற்கு முன்பு அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வடிகால்களை தூர்வாரி உயர்த்தி கட்டி மூடி அமைக்கும் பணி செய்தல்.

**தெருமின் விளக்கு**

- கோமான்புதூர் ரோட்டில் நிறுவப்பட்டுள்ள மின் கம்பங்களில் தெருமின் விளக்குக்குகள் பொருத்தக்கூடிய மின்கம்பங்கள் இல்லாத நிலையில் அப்பகுதிகள் இருள் சூழ்ந்த நிலையில் காணப்படுகிறது. அப்பகுதி தெருமின் கம்பிகள் இழுத்து மூன்று இடங்களில் புதியதாக தெருமின் விளக்கு பொருத்துதல்.

- சேதுராஜா தெரு தெற்கு பகுதி (மகாழ்ரா பிளாட்-டில்) இருள் சூழ்ந்த நான்கு இடங்களில் புதியதாக தெருமின் விளக்கு பொருத்துதல்.

**குடிநீர் பணி**

- சேதுராஜா தெருவில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள பொது கிணறு இடிந் த நிலையில் மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு பொதுக் கிணற்றை தூர்வாரி பழுது நீக்கம் செய்து பிளாட்பார்ம் அமைக்கும் பணி செய்தல்.

**தீர்மான எண்:134**

- பணிகளின் அவசியம் கருதி தேவையான பணிகளுக்கு முன்னுரிமை அளித்து அரசிடமிருந்து நிதி பெற்று சாலைப் பணிகள் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.
- இந்நகராட்சி நிதி நிலைமையை கருத்தில் கொண்டு எதிர்வரும் மழைக் காலங்களுக்கு முன்பு மழைநீர் வடிகால் தூர் வாரி மூடி அமைக்கும் பணி செய்ய தீர்மானிக்கப்படுகிறது.
- பணிகளின் அவசியம் கருதி தேவையான பணிகளுக்கு முன்னுரிமை அளித்து அரசிடமிருந்து நிதி பெற்று தெருமின் விளக்கு அமைக்கும் பணிகள் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.
- இந்நகராட்சி நிதி நிலைமையை கருத்தில் கொண்டு பொது கிணற்றை தூர்வாரி பழுது நீக்க பணிகள் செய்வதற்கு தீர்மானிக்கப்படுகிறது.

**பொருள் எண்.6**

காயல்பட்டினம் நகராட்சியின் 8 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. S. மெய்தீன் அவர்கள் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி தருவதற்கு தெரிவித்துள்ள கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கு பரீசிலனைக்கும் வைக்கப்படுகிறது.

**குடிநீர் பணி**

- 8-வது வார்டுக்கு உட்பட்ட மருத்துவ தெருவில் அமைந்துள்ள பொது கிணற்றை தூர்வாரி பழுது நீக்கம் செய்தது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருதல்.

**கட்டிடம்**

- காயல்பட்டினம் நகராட்சி பேருந்து நிலையத்தில் வணிக வளாக கடைகளுக்காக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. நகராட்சியின் வருமானத்தை பெருக்கும் வகையில் வணிக வளாக கட்டிடத்தில் கூடுதலாக மேல் தளத்தில் கடைகள் கட்டுதல்

**வேகத்தடை**

- 8-வது வார்டுக்கு உட்பட்ட இரத்தினாபுரியில் பேருந்து நிலையம் அருகில் அங்கன்வாடி மற்றும் பெட்ரோல் பங்க் அமைந்து உள்ளது. இப்பகுதியில் சாலையில் இருபுறங்களிலும் வாகனங்கள் அதிவேகமாக சென்று வருவதால் அடிக்கடி விபத்து ஏற்பட்டு வருகிறது. அதனால் சாலையின் இருபுறங்களில் வேகத்தடை அமைத்தல்.

**ஆக்கிரமிப்பு**

- காயல்பட்டினம் புதிய பேருந்து நிலையத்திற்கு வெளியே 30 வருடங்களுக்கு மேலாக தளபதி ஆட்டோஓட்டுநர் சங்கம் இயங்கி வருகிறது. அவர்களின் வாகனங்களை புதிய பேருந்து நிலையத்திற்கு வெளியே நிறுத்துவதற்கு இடையூராக இருக்கக்கூடிய கொடி கம்பத்தின் கட்டிடங்களை நகராட்சியின் மூலமாக அப்புறப்படுத்துதல்.
- 8-வது வார்டுக்கு உட்பட்ட நியூகாலனி, முதல் தெருவிற்கு செல்லும் வழியில் அமைந்துள்ள சாலையின் நடுவே உள்ள இரும்பு போஸ்ட்டை அப்புறப்படுத்துதல்.

**பொது**

- காயல்பட்டினம் நகராட்சிக்கு உட்பட்ட DCW தொழிற்சாலை இயங்கி வருகிறது. இந்த தொழிற்சாலையில் காயல்பட்டினம் நகர்பகுதியில் படித்துள்ள ஏழை எளிய மாணவர்களுக்கு நிரந்திர வேலை வாய்ப்புகளை அளித்திடும் பொருட்டு நகர்மன்றத்தின் சார்பாக கேட்டுக் கொள்ளுதல்.
- 8-வது வார்டு பகுதியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையில் தற்போது போதிய சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் செவிலியர்கள் இன்றி இருப்பதால் மருத்துவமனை சுகாதாரமின்றி காணப்படுகிறது. ஆகையால் காலியாக இருக்கக்கூடிய சுகாதார பணியாளர்கள் மற்றும் செவிலியர்களை உடனடியாக பணியமர்த்துவதற்கு நகர்மன்றத்தின் சார்பாக கேட்டுக் கொள்ளுதல்.
- 8-வது வார்டு பகுதியில் அமைந்துள்ள மின்வாரிய அலுவலகத்தில் ஆண்டுகாலமாக பணியாளர்கள் பற்றாக்குறை நீடித்து வருகிறது. காலியாக உள்ள பணியிடங்களுக்கு உடனடியாக பணியாளர்கள் நியமனம் செய்ய நகர்மன்றத்தின் சார்பாக கேட்டுக் கொள்ளுதல்.

**தீர்மான எண்:135**

- இந்நகராட்சி நிதி நிலைமையை கருத்தில் கொண்டு பொது கிணற்றை தூர்வாரி பழுது நீக்க பணிகள் செய்வதற்கு தீர்மானிக்கப்படுகிறது.
- கட்டிடத்தின் அஸ்திவாரம் தன்மை குறித்து ஆய்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.
- நெடுஞ்சாலை துறை மூலம் வேகத்தடை அமைப்பதற்கு தீர்மானிக்கப்படுகிறது.

- பேருந்து நிலைய கொடி கம்பத்தின் கட்டிடங்களை அகற்றுவதற்கு இந்நகராட்சி நகரமைப்பு பிரிவின் மூலம் ஆய்வறிக்கை பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது

**<u>பொருள் எண்.7</u>**

காயல்பட்டினம் நகராட்சியின் 11 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. K.S.N. செய்யது ஆசியா ஃபஹ்மிதா அவர்கள் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி தருவதற்கு தெரிவித்துள்ள கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கு பரீசிலனைக்கும் வைக்கப்படுகிறது

**<u>சாலை வசதி</u>**

- எதிர்வரும் மழைக்காலத்திற்கு முன்னர் மொகுதூம் தெரு, புதுக்கடைத் தெரு மற்றும் பிரின்ஸ்வீதி ஆகிய மூன்று தெருக்களிலும் உள்ள சாலைகளை தரமான தார் சாலைகளாக அமைத்தல்.

**<u>குடிநீர் வசதி</u>**

- பிரின்ஸ் வீதியில் தொடர்ந்து 3-வது முறையாக தண்ணீர் குழாய் உடைப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு நிரந்தர தீர்வாக அங்குள்ள பழைய குடிநீர் குழாய்களை அகற்றி புதிய குழாய்களை அமைத்தல்.

**<u>தெருமின் விளக்கு</u>**

- L.F ரோடு, பிரின்ஸ் வீதியில் இரண்டு புதிய மின்கம்பத்துடன் தெருமின் விளக்குகள் பொருத்துவதற்கு ஆவணம் செய்தல்.
- புதுக்கடைத் தெருவில் ஆபத்தான நிலையில் உள்ள இரண்டு மின்கம்பங்களை உடனே மாற்றி அமைத்தல்.
- USC மைதானம் எதிர்புறம் புதுப்பள்ளியின் பின்புறம் (ரிஜ்வான் சங்கம் முன்பு) மின் விளக்குகள் இல்லாததால் இரவு நேரங்களில் இருள் சூழ்ந்துள்ளது. எனவே அங்கு புதிய மின்கம்பங்களுடன் தெருமின் விளக்குகள் அமைத்தல்.

**<u>கட்டிடம்</u>**

- பழைய ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி (தைக்கா ஸ்கூலின்) துப்புரவுப் பணிகளை துரிதப்படுத்தி, அங்கு பள்ளிக் கட்டிடம் விரைவில் அமைக்க ஆவணம் செய்தல்.

**<u>பொது</u>**

- நகரில் நாய் தொல்லைகள் அதிகரித்துள்ளதால் அதனை கட்டுப்படுத்த உடனே நடவடிக்கை எடுத்தல்.
- கடற்கரையின் உள்ளே அமைந்துள்ள கடைகளை அப்புறப்படுத்தி வெளியே அமைந்துள்ள ஆவின் பூத் பின்புறம் கடைகளை அமைத்து கடற்கரையை தூய்மைபடுத்துதல்.

**தீர்மான எண்:136**

- பணிகளின் அவசியம் கருதி தேவையான பணிகளுக்கு முன்னுரிமை அளித்து அரசிடமிருந்து நிதி பெற்று சாலைப் பணிகள் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.
- இந்நகராட்சி நிதி நிலைமையை கருத்தில் கொண்டு புதிய குடிநீர் குழாய்கள் அமைப்பதற்கு தீர்மானிக்கப்படுகிறது.
- அரசிடமிருந்து நிதி பெற்று தெருமின் விளக்கு அமைக்கும் பணிகள் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.
- இந்நகராட்சி நிதி நிலைமையை கருத்தில் கொண்டு பொது கோரிக்கைகள் செய்வதற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது

**பொருள் எண்-8**

காயல்பட்டினம் நகராட்சியின் 17 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. G. ராமஜெயம் அவர்கள் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி தருவதற்கு தெரிவித்துள்ள கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கு பரீசிலனைக்கும் வைக்கப்படுகிறது.

**சாலை வசதி**

- ஓடக்கரைக்கு கிழக்கே உள்ள பொன் இரட்டை முத்து கோவிலுக்கு செல்லும் வழியில் சாலை அமைத்தல்.

**தெருமின் விளக்கு**

- 17-வது வார்டு ஓடக்கரை, பூந்தோட்டம், காயிதே மில்லத் நகருக்கு நான்கு சிறுமின் உயர்மின் கோபுர மின் விளக்குகள் அமைத்தல்.
- 17-வது வார்டில் இருள் சூழ்ந்த பகுதிகளில் மின் கம்பங்கள் உள்ள இடங்களில் தெருமின் விளக்கு கம்பிகள் இழுத்து புதியதாக மின் விளக்குகள் பொருத்துதல்.

**பொது**

- 17.வது வார்டு வாணியக்குடி தெருவில் உள்ள அங்கன்வாடி மையம் சேதம் அடைந்து இடிந்து விழுந்து விட்டது. அதனால் தற்போது அங்கன்வாடி வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. ஆகையால் உடனடியாக அங்கன்வாடி மையம் கட்டுதல்.

**தீர்மான எண்:137**

- பணிகளின் அவசியம் கருதி தேவையான பணிகளுக்கு முன்னுரிமை அளித்து அரசிடமிருந்து நிதி பெற்று சாலைப் பணிகள் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.
- அரசிடமிருந்து நிதி பெற்று தெருமின் விளக்கு அமைக்கும் பணிகள் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.

- இந்நகராட்சி நிதி நிலைமையை கருத்தில் கொண்டு அங்கன்வாடி கட்டிடம் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது

**பொருள் எண்-9**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட தகுதியான சாலையோர வியாபாரிகள் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட, நடப்பாண்டில் 2022- 2023 புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அடையாள அட்டை வழங்கும் பணிகள் மேற்கொள்ள 15.07.2022 அன்று (இரண்டு உறை) மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | M/s. MIRIFICAL CAREERS PVT LTD,<br>12A, Second Floor, K.K. Building,<br>T. Nagar, Ramanathapuram,<br>Coimbatore – 641 045. | ரூ. 700/ -நபர் ஒன்றுக்கு |
| 2 | M/s. BHARATHI HR CONSULTANCY<br>No.3/36, First Avenue,<br>Rangasamy Naidu Layout,<br>Kuniyamuthur<br>Coimbatore – 641 008 | ரூ. 850/- நபர் ஒன்றுக்கு |

மேற்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல்படி குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள M/s. MIRIFICAL CAREERS PVT LTD, Coimbatore நிறுவனத்தின் விலை விகிதத்தை மேலும் விலைக் குறைப்பு செய்து (Negotiation) கொடுக்க கோருமாறு தெரிவித்துள்ள நகராட்சி பொறியாளரின் பரிந்துரையை ஏற்று 25.07.2022ம் தேதி இவ்வலுவலகம் மூலம் கடிதம் அனுப்பப்பட்டது.

அதன்படி M/s. MIRIFICAL CAREERS PVT LTD, Coimbatore நிறுவனம் சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பு பணிகள் செய்து கொடுப்பதற்கு நபர் ஒன்றுக்கு ரூ. 650 /- சம்மதம் தெரிவித்து விலை குறைப்பு செய்துள்ளார்கள். அதனை தொடர்ந்து இந்நகராட்சி பொறியாளரால் பரிந்துரையின்படி மேற்கண்ட நிறுவனம் மூலம் சாலையோர வியாபாரிகள் கணக்கெடுக்கும் பணி மேற்கொள்வதற்கும், பணி உத்திரவு வழங்குவதற்கும் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பு பணி செய்தவற்கு ரூ.650/-வீதம் (ஒரு நபருக்கு) விலை விகிதம் கொடுத்துள்ளதை மன்றம் அங்கிகரிக்கலாம்.
2. நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இத்திட்டத்திற்கு தனியாக மானியம் ஒதுக்கிடு செய்து வரும் பட்சத்தில் வருவாய் நிதி செலவினத்தை ஈடு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.556/2022/எப்1)

**தீர்மான எண்:138**

- அனுமதிக்கப்படுகிறது
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது

**பொருள் எண் :10**

காயல்பட்டினம் நகராட்சி 2011-ன் கணக்கெடுப்பின்படி 40588 ஆகும். தற்பொழுது மக்கள் தொகை தோரயமாக 49302 ஆகும். இந்நகராட்சிக்கான குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு புதிய குடிநீர் மேம்பாடு திட்டம் செயல்படுத்தும் வகையில் ஸ்ரீவைகுண்டம் பொன்னன்குறிச்சியில் தலைமை நீரேற்று மையம் அமைக்கப்பட்டு தாமிரபரணி ஆற்றில் 6 எண்ணம் நீர் உறிஞ்சும் கிணறுகள் அமைக்கப்பட்டு அதிலிருந்து குடிநீர் பெறப்பட்டு தலைமை நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர் தேக்க தொட்டியில் குடிநீர் சேமிப்பு செய்யப்பட்டு, 100HP திறனுள்ள மின் மோட்டார்களை பயன்படுத்தி நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் பெறப்பட்டு கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

கடந்த வடகிழக்கு பருவ மழையின் போது, தாமிரபரணி ஆற்றில் ஏற்பட்ட அதிகப்படியான வெள்ளத்தின் காரணமாகவும் ஆற்றில் அதிகரித்துள்ள அமலைச் செடிகளின் காரணமாகவும் நகராட்சிக்கு சொந்தமான நீர் உறிஞ்சும் கிணறுகளில் இருந்து எடுக்கப்படும் குடிநீரானது அசுத்தமடைந்து வருவதால் இந்நகர் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளது. மேலும், வடகிழக்கு பருவமழை காலம் தொடங்க இருக்கும் நிலையில் மீண்டும் ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டால் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதில் மிகுந்த பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகும் என்பதை கருத்தில் கொண்டு

முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவது அவசியமாகிறது. மேலும், ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள 6 எண்ணம் நீர் உறிஞ்சும் கிணறுகள், தலைமை நீரேற்றத்தில் அமைக்கப்பட்டுள்ள தரைமட்ட நீர் தேக்க தொட்டி ஆகியவற்றை நல்ல முறையில் சுத்தம் செய்திடவும் , குடிநீர் விநியோகம் செய்திடும் பிரதான குழாய்களில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள Scour வால்வுகளை சுத்தம் செய்திடவும், தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பிரதான குடிநீர் விநியோக மின்மோட்டார்களை நல்ல முறையில் பழுது பார்த்து பராமரிப்பு பணிகள் செய்வது அவசியமாகிறது என்று இந்நகராட்சி குடிநீர் குழாய் பொருத்துனரால் 22.06.2022-ந் தேதி அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து 30.06.2022-ந் தேதி நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்டத்தின் போது இப்பொருள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இப்பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறு இந்நகர்மன்ற தலைவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பணியினை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளும் பொருட்டு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகளை செய்வதற்கும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளுவதற்கும், இந்நகராட்சி பொறியாளரால் தெரிவிக்கப்பட்டது. அதன்படி இந்நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொண்டு உள்ளதை மன்றம் அங்கிகரிக்கலாம்.
2. இந்நகராட்சி குடிநீர் வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 577/2022/இ1)

**தீர்மான எண்:139**

- அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

பொருள் எண் :11

காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் கிணறுகள், சம்ப் மற்றும் மேல் நிலை நீர்த்தேக்கதொட்டிகள் கலங்கிய நிலையில் இருப்பதாலும் மேலும், பருவமழை தொடங்க உள்ள நிலையில் அனைத்து குடிநீர் கிணறுகளையும் தூர்வாறும் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டிய நிலையில் இருப்பதால் 30.06.2022ம் தேதி நடைபெற்ற நகர்மன்ற கூட்டத்தில் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களின் முடிவின்படியும் 23.07.2022ம் நாளன்று பிற்பகல் 3.00 மணி அளவில் குடிநீர் விநியோகம் தொடர்பாக நகர்மன்ற தலைவர் தலைமையில் கலந்தாய்வு கூட்டத்தில் நடைபெற்ற முடிவுகளின்படியும், காயல்பட்டினம் நகராட்சிக்கான குடிநீர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள், தாமிரபரணி ஆற்றில், அமைக்கப்பட்டுள்ள 6 எண்ணம் நீர் உறிஞ்சும் கிணறுகள் சுத்தம் செய்தல், நீரேற்றும் நிலையத்தில் அமைந்துள்ள பிரதான மின் மோட்டார் பம்ப் பழுது பார்த்தல் மற்றும் நீர் உறிஞ்சும் கிணறுகளை சுற்றி ஜே.சி.பி பயன்படுத்தி சுத்தம் செய்தல் போன்ற பணிகளை போர்க்கால அடிப்படையில் செய்வதற்கு கீழ்க்காணும் விவரப்படியான மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | எண்ணம் | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | தாமிரபரணி ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள நீர் உறிஞ்சும் கிணறுகளை சுத்தம் செய்து அதில் உள்ள மின் மோட்டார்கள் மற்றும் வால்வுகளை பழுது பார்த்து பராமரிப்பு செய்தல் | ஒரு எண்ணம் | திரு. தலவானி முத்து<br>திரு. மாதவன்<br>திரு. மாடசாமி | ரூ.41000/-<br>ரூ.39800/-<br>ரூ.45000/- |
| 2 | தலைம நீரேற்றம் நிலையத்தில் உள்ள தலைமட்ட நீர்த் தேக்கத் தொட்டியினை சுத்தம் செய்தல் | ஒரு எண்ணம் | திரு. தலவானி முத்து<br>திரு. மாதவன்<br>திரு. மாடசாமி | ரூ.25000/-<br>ரூ.23900/-<br>ரூ.26000/- |
| 3 | தலைமை நீரேற்றம் நிலையத்தில் உள்ள பிரதான பம்பிங் மோட்டார் (100 HP -2 எண்ணம்) பம்ப்பினை பழுது | இரண்டு எண்ணம் | திரு. தலவானி முத்து<br>திரு. மாதவன் | ரூ. 82000/-<br>ரூ.79800/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | பார்த்து பராமரிப்பு செய்தல். | | திரு. மாடசாமி | ரூ.84000/- |
| 4 | தாமிரபரணி ஆற்றில் நகராட்சிக்கு சொந்தமான நீர் உறிஞ்சும் கிணறுகளை சுற்றி ஜே.சி.பி பயன்படுத்தி சுத்தம் செய்தல் | ஒரு நாள் வாடகை | திரு. தலவானி முத்து<br>திரு. மாதவன்<br>திரு. மாடசாமி | ரூ. 15000/-<br>ரூ.14000 /-<br>ரூ.16100/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.டி. மாதவன் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும், அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு குடிநீர் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கும், பணி உத்திரவு வழங்குவதற்கும் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. குடிநீர் பராமரிப்பு பணிகளை செய்வதற்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.டி. மாதவன், காயல்பட்டினம் என்பவரின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பராமரிப்பு பணிகள் செய்வதற்குரிய பணி உத்திரவு வழங்குவதற்கு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. இந்நகராட்சி குடிநீர் வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 577/2022/இ1)

**தீர்மான எண்:140**

- அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது

<u>பொருள் எண் :12</u>

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலின்படி, அரசு திட்டத்தில் நகராட்சிகளில் பூங்கா அமைக்க வேண்டிய இடங்களை தேர்வு செய்து உரிய திட்டப்பிரேரனை வழிமுறையாக அனுப்பி வைக்குமாறு திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக அலுவலகத்தின் 08.08.2022-ந் தேதி அனுப்பப்பட்ட செய்தி மூலம் தெரிவிக்கப்பட்டது.

மேற்காணும் செய்தியின்படி, இந்நகராட்சிக்குட்பட்ட கோமான் புதூர் தெருவில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் நகராட்சி பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் பூங்கா மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ. 35.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட திட்ட பிரேரனை வழிமுறையாக சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.698/2022/இ1)

**தீர்மான எண்:141**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் :13**

காயல்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு 26.08.2022ல் மேற்கொள்ளப்படும் மறுபொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளுக்குரிய அறிவிக்கைகள் தினகரன் தினசரி நாளிதழில் 14.08.2022ந் தேதி விளம்பரம் செய்த வகைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.16,707/-ஐ வழங்ககோரி பட்டியல் எண்.3300366723 தேதி.14.08.2022-ன்படி வரப்பெற்றுள்ளது. மேற்காணும் விளம்பரக் கட்டணத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு.

மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்-706/2015/அ2)

**தீர்மான எண்:142**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் ;14**

அரசின் சிறப்பு திட்டமான நமக்கு நாமே திட்டத்திற்கு 2021- 2022 ஆம் ஆண்டிற்கு, காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் பொதுமக்கள் பங்களிப்புடன் செயல்படுத்தும் பொருட்டு கீழ்க்கண்டவாறு உள்ள பணிகள் செய்வதற்குரிய திட்ட மதிப்பீடுகளுக்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உத்திரவு ந.க.எண்.27519-49/2021-பி2, நாள்.13.08.2022ன்படி கீழ்க்கண்டவாறு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | திட்டக் கருத்துரு உத்தேச மதிப்பீடு தொகை (இலட்சத்தில்) | அனுமதிக்கப் பட்ட மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | அரசு மானியம் (இலட்சத்தில்) | பொதுமக்கள் பங்களிப்பு (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | Installation of 1 no 12 m mini mast with 6 nos of 150 W LED fittings in Nainar street periyapalli Junction | 4.40 | 4.25 | 2.83 | 1.42 |
| 2 | Installation of 1no 12m mini mast with 6 nos of 150 W LED fittings in Mohadumpalli Junction | 4.40 | 4.25 | 2.83 | 1.42 |
| 3 | Installation of 1 no 12m mini mast with 6 nos of 150W LED fittings in mattukulam red star sangam junction near maraikkar palli | 4.40 | 4.25 | 2.83 | 1.42 |
| 4 | Installation of 1 no 12m mini mast with 6 nos of 150W LED fittings in Quitheymilleth Nagar | 4.40 | 4.25 | 2.83 | 1.42 |
| 5 | Installation of 1 no 12m mini mast with 6 nos of 150W LED fittings in periyanesavu street near IOB | 4.40 | 4.25 | 2.83 | 1.42 |

மேற்க்காணும் பணிகள் செய்வதற்கு நமக்கு நாமே திட்டம் 2021- 2022-ன் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உத்தரவு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு;

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(கோப்பு எண்.205/2022/இ1

**தீர்மான எண்:143**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உத்திரவு பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண் :15**

காயல்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பட்டியலில் கண்டுள்ள இனங்களுக்கு மூன்று (3) ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் உரிமம் வழங்குவதற்றிய மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் 26.08.2022ந் தேதி மேற்கொள்ளப்பட்டது.

1. புதிய பேரூந்து நிலையம், பேரூந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்
2. வண்ணார்குடி கடைத் தெருவில் உள்ள தினசரி சந்தையில் உள்ள வியாபாரிகளிடம் தினசரி வசூல் செய்யும் உரிமம்.
3. கடற்கரை பூங்காவில் உள்ள கழிப்பறை கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
4. ஓடக்கரை பகுதியில் உள்ள உப்பு ஓடையில் மீன் பிடிக்கும் உரிமம்.
5. புதிய பேரூந்து நிலையம் கிணற்றில் தண்ணிர் எடுக்கும் உரிமம்

வரிசை எண். 1 முதல் 5வரை உள்ள குத்தகை இனங்களுக்கு உரிமம் எடுக்க யாரும் முன் வரவில்லை. ஆகவே, இந்த குத்தகை இனங்களுக்கு 3 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் உரிமம் வழங்குவதற்குரிய மறுபொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி(மூன்றாம் அழைப்பு) நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்

கோப்பு எண்: 706/2015/அ2

**தீர்மான எண்:144**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் :16**

காயல்பட்டினம் நகராட்சியில் குடிநீர் விநியோகப்பயன்பாட்டில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை தேவையான பணியாளர்கள் மற்றும் அதற்கான சுத்தம் செய்யும் பொருட்களை பயன்படுத்தி சுத்தம் செய்தல், நகராட்சிப் பகுதிகளில் உள்ள குடிநீர் பம்பிங் குழாய்கள் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யப் பதிக்கப்பட்டுள்ள அனைத்து வகை குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை அதற்கான பணியாளர்கள் மற்றும் அதற்கு தேவையான பொருட்களை பயன்படுத்தி சீரமைத்தல், நகராட்சிப் பகுதிகளில் உள்ள குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரிசெய்யும் பொழுது சிமெண்ட் சாலைகள் மற்றும் தார்சாலைகளில் ஏற்படும்

பழுதுகளை அதற்கான பணியாளர்கள் மற்றும் தேவையான பொருட்களை பயன்படுத்தி சீரமைத்தல், தலைமை நீரேற்றம் நிலையத்தில் உள்ள குடிநீர் பம்பிங் செய்யும் பணிகளை செய்திட மின்பணியாளர் (நிலை 2) ஒரு நபர் மற்றும் உதவியாளர் (மஸ்த்தூர் பணியாளர் நிலை 2) நான்கு நபர்களை நியமித்து பணி செய்தல், நகராட்சிப்பகுதிகளில் குடிநீர் விநியோகப் பணிகளை செய்திட உதவியாளர் (மஸ்த்தூர் பணியாளர் நிலை2) ஐந்து நபர்கள் மற்றும் அவசர பணிகளுக்காக வாகன ஓட்டுநர் (ஹெவி) ஒரு நபரை நியமித்து பணி செய்தல் மற்றும் காயல்பட்டினம் நகராட்சியில் குடிநீர் கட்டணம் செலுத்தாத நபர்களின் குடிநீர் இணைப்புகளை துண்டிப்பு செய்தல் போன்ற பணிகளை ஒப்பந்த பணிகள் மூலம் செய்திடவும், அதற்கான செலவினங்களை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் நகர்மன்ற தீர்மான எண். 2017 நாள் 29.05.2020 ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டு அதன்படி ஓராண்டு ஒப்பந்த அடிப்படையில் பணி செய்திட திரு. டி. மாதவன், ஒப்பந்ததாரர், ஓடக்கரை, காயல்பட்டினம் என்பவருக்கு 06.05.2020 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு அதன்படி குடிநீர் விநியோகப் பணிகள் மற்றும் பம்பிங் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்ததாரரின் ஒப்பந்தக் காலத்தினை ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நகர்மன்ற அனுமதி பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டு மேற்காணும் குடிநீர் பம்பிங் செய்யும் பணிகள், குடிநீர் விநியோகம் செய்யும் பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்பொழுது , ஜீன், ஜீலை மற்றும் ஆகஸ்ட் 2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு குடிநீர் திட்ட பராமரிப்பு பணிகள் செய்வதற்கு நகர்மன்ற தீர்மான எண்77, நாள்31.05.2022ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே குடிநீர் பம்பிங் செய்யும் பணிகளையும் நகராட்சிப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளையும் மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிகளையும் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டுவரும் திரு.டி.மாதவன், ஒப்பந்ததாரர், ஓடக்கரை, காயல்பட்டினம் என்பவர் மூலம் ஏற்கனவே நகர்மன்றத்தால் அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் பணிகளை தொடர்ந்து செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர் 2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து மேற்கொள்ளவும், வேலை உத்திரவு வழங்கிட அனுமதிக்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வருவாய் நிதியில் வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(கோப்பு எண்: 403/2020/இ1)

**தீர்மான எண்:145**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் :17**

காயல்பட்டினம் நகராட்சி குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு 2017-ஆம் ஆண்டு முதல் புதிய குடிநீர் மேம்பாடு திட்டம் செயல்படுத்தும் வகையில் ஸ்ரீவைகுண்டம் பொன்னன்குறிச்சியில் தலைமை நீரேற்று மையம் அமைக்கப்பட்டு தாமிரபரணி ஆற்றுப்படுகையில் 6 எண்ணம் நீர் உறிஞ்சும் கிணறுகளுக்கு 7.5 HP திறனில் தலா 2 மின் மோட்டார்கள் வீதம் 12 மின் மோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளது. இந்த 6 எண்ணம் கிணற்றுகளுக்கும் 7.5 HP திறனுள்ள மின் மோட்டார்கள் 6 எண்ணம் ஸ்பேர் மோட்டார்களாகும். குடிநீர் சேமிப்பு தொட்டியிலிருந்து 100HP திறனுள்ள 2 மின் மோட்டார்கள் மூலம் நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் அனுப்பப்பட்டு, இந்நகர் முழுவதும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நகர் பகுதியில் குடிநீர் விநியோகம் செய்வதற்காக பொன்னன்குறிச்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள குடிநீர் கிணறுகள், மின் மோட்டார் அறைகளில் பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டார்கள் பழுது நீக்கம் மற்றும் மின் பழுது பணிகள் செய்யவும் குடிநீர் விநியோகத்திற்காக 27 கி.மீ நீளமும் பம்பிங் மெயினில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக பழுது நீக்கம் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள கால தாமதம் ஏற்படும்போது இந்நகர் பகுதி சீரான குடிநீர் வழங்குவதில் பிரச்சினை ஏற்பட்டு வருகிறது. ஆகவே மேற்காணும் மின்மோட்டார்கள் மற்றும் குடிநீர் பிரதான குழாய்களை பழுதுகள் ஏற்படும்போது அவற்றை உடனடியாக சரி செய்வதற்கு எதுவாக ஆண்டு பராமரிப்பு பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்தினை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. குடிநீர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு ரூ. 9.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.698/2022/இ1)

**தீர்மான எண்:146**

- உத்தேச மதிப்பீடு அங்கீகரிக்கப்படுகிறது
- குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண் :18**

காயல்பட்டணம் நகராட்சியில் Swachh Bharath Mission (Urban 2.0) திட்டத்தின் கீழ் பப்பரப்பளி உரக்கிடங்கில் சேகரமாகி தேங்கியுள்ள 22436க.மீ திடக்கழிவு குப்பைகளை BIO MINING முறையில் அப்புறப்படுத்தும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் நக.எண்.9512/2022/SBM-1 நாள்.20.06.2022 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டும் நகர்மன்ற தீர்மானம் எண்.119 நாள்.29.07.2022 ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டும் அதன்படி தலைமைப்பொறியாளர்,நகராட்சி நிர்வாக இயக்குநரகம்.சென்னை அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் நக.எண்.001/2022/DO1 நாள்.20.07.2022 ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.இதன்படி மேற்கண்ட திட்டப்பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் நக.எண். 9512/2022/SBM1 நாள். 01.08.2022ன்படி மாநில அளவில் விளம்பரம் செய்யப்பட்டு மின்னனு முறையில் 22.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மின்னனு முறையில் பெறப்பட்டுள்ளது.

1) திரு.பி.மாடசாமி
   118B NGO 'B' காலணி
   பாளையங்கோட்டை
   திருநெல்வேலி

2) திரு.எம்.மலையாண்டிபிரபு,
   13/16ஏ இடைக்குடி தெரு,
   சாத்தான்குளம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதியானதாக உள்ளதால் இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 25.08.2022 அன்று மின்னனு முறையில் திறக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்குப்பட்டியல் (முதல் விலைக்குறைப்பு சம்மதக்கடிதத்தின்படி) தயாரிக்கப்பட்டுள்ளது.

1) திரு.பி.மாடசாமி
   118B NGO 'B' காலணி — மதிப்பீடு ரேட்
   பாளையங்கோட்டை
   திருநெல்வேலி

2) திரு.எம்.மலையாண்டிபிரபு,
13/16ஏ இடைக்குடி தெரு, மதிப்பீடு ரேட்டை விட 14.36% கூடுதல்
சாத்தான்குளம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.மாடசாமி,118B NGO 'B' காலணி,பாளையங்கோட்டை,திருநெல்வெலி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கிகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதி வழங்கலாம்
2) திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண். 1036/2021/இ1)

**தீர்மான எண்:147**

- அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண் :19**

காயல்பட்டினம் நகராட்சியின் அவசர அவசியத்தின் கீழ் பணிகளை நகராட்சி சட்டம் 1920 பிரிவு15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டு தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

அலுவலக குறிப்பு;

மன்றம் அனும்திக்கலாம்.

**தீர்மான எண்:148**

பிரிவு 15 பதிவேடு பார்வையிட்டு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்எண்-20**

காயல்பட்டினம் நகராட்சியின் ஏப்ரல்-2022 முதல் ஜீலை- 2022 ஆம் மாதம் வரையிலான கேட்பு வசூல் நிலுவை பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | வரியினங்கள் | நிலுவை மற்றும் நடப்பு கேட்பு(இலட்சத்தில்) | நிலுவை மற்றும் நடப்பு வசூல்(இலட்சத்தில்) | நிலுவை மற்றும் நடப்பு நிலுவை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | சொத்துவரி | 34.77 | 9.50 | 25.27 |
| 2 | காலிமனை வரி | 13.43 | 2.67 | 10.76 |
| 3 | குடிநீர் கட்டணம் | 150.55 | 31.88 | 118.67 |
| 4 | வரியற்ற இனம் | 13.98 | 0.91 | 13.07 |
| 5 | **தொழில்வரி** | 17.63 | 0.73 | 16.90 |
| 6 | **SUC Charges** | 14.56 | 3.98 | 10.58 |

அலுவலக குறிப்பு:

- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**தீர்மான எண்:149**

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்:21**

காயல்பட்டினம் நகராட்சியின் ஏப்ரல்-2022 முதல் ஜீலை- 2022 ஆம் மாதம் வரையிலான வரவு மற்றும் செலவு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரவினங்கள் | | | |
|---|---|---|---|
| 110 | வரியினங்கள் | I-1 | 1290078 |
| 130 | நகராட்சியின் வாடகை வரவினங்கள் | I-3 | 223095 |
| 140 | பயனர் கட்டணங்கள் | I-4 | 4298646 |
| 150 | விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம் | I-5 | 386893 |
| 160 | வருவாய் மானியங்கள், பங்களிப்பு மற்றும் மானியங்கள் | I-6 | 27927038 |
| 170 | முதலீடுகள் மூலம் வருமானம் | I-7 | 3300 |
| 171 | வங்கி வட்டி | I-8 | 143430 |
| 180 | இதர வருமானம் | I-9 | 185046 |
| | | **மொத்தம்** | **34457526** |

| செலவினங்கள் | | | |
|---|---|---|---|
| 210 | ஊதிய செலவினங்கள் | I-10 | 21191469 |
| 220 | நிர்வாக செலவினங்கள் | I-11 | 1375444 |
| 230 | இயக்க-பழுதுகள்(ம)பராமரிப்பு செலவுகள் | I-12 | 7395268 |
| 240 | நிதிச்செலவுகள் | I-13 | 53907 |
| 250 | திட்டசெலவுகள் | I-14 | 188745 |
| 260 | மானியங்கள் (ம) பங்களிப்புகள் | I-15 | 10000 |
| | | **மொத்தம்** | **30214833** |
| | | **மொத்தம் கூடுதல்/குறைவு** | **4242693** |

அலுவலக குறிப்பு:

- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**தீர்மான எண்:150**

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**ஒம்/கே.ஏ.எஸ். முத்து முஹம்மது**
**நகர்மன்ற தலைவர்,**
காயல்பட்டினம் நகராட்சி

/உண்மை நகல்/

02/09/2022

ஆணையாளர்,
காயல்பட்டினம் நகராட்சி